சிவமயம்



யாழ்ப்பாணம் மூளாய் வாழ்நரும்,

நரசிம்ம வழிவந்த வேளாண்குலதிலகமும்,

சங்கானைப் பட்டினசபை ஒய்வுபெற்ற இறைவரிப் பரிசோதகரும்,

எல்லோரது உள்ளங்களையும் கவர்ந்த உத்தமனுமாகிய

உயரமரர்

## சிவசம்பு சரவணமுத்து (தங்கு)

அவர்களின்

மறைவையொட்டி வெளியிடப்பெற்ற

# நினைவு மலர்

01 - 03 - 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் சிவசம்பு சரவணமுத்து அவர்கள்

தோற்றம்: 25 - 01 - 1927 மறைவு: 16 - 01 - 1987

சங்கத்தமிழ் வளர்த்த சங்கானை பெற்றெடுத்து
முத்தான மூனாய்கு முகமலர்ந்து வந்தசரவண
முத்தாம் சிவசம்பு தந்தமகன் தங்கரவர்
பத்தியொடு பரமனடி சேர்ந்தனர் பரகதியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் மூளாய் வாழ்நரும்,

நரசிம்ம வழிவந்த வேளாண்குலதிலகமும்,

சங்கானைப் பட்டினசபை ஓய்வுபெற்ற இறைவரிப் பரிசோதகரும்,

எல்லோரது உள்ளங்களையும் கவர்ந்த உத்தமனுமாகிய

உயரமரர்

## சிவசம்பு சரவணமுத்து (தங்கு)

அவர்களின்

மறைவையொட்டி வெளியிடப்பெற்ற

# நினைவுமலர்

**01 - 03 - 1987**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திதி நிர்ணய வெண்பா

போற்றும் அக்ஷயத்துத் தைத்திங்கள் மூன்றில்
ஆற்றும் துதியை அபரபக்கம் — ஏற்றுயர்த்தோன்
தன்பாத நீழல் சரணுகச் சரவணமுத்து
அன்பால் அடைந்தான் அறி.

## சமர்ப்பணம்

முன்னைய தவத்தின் பேருய்
முகிழ்த்ததோர் அன்பு வித்தே
அன்னையாம் மூளாய் பெற்ற
ஆழ்கடல் ஈன்ற முத்தே
பின்னையெம் வாழ்வுப் பூங்கா
குலுங்கிட வைத்த கொத்தே
தன்னையே தந்து தொண்டில்
தனித்துவம் பெற்ற சத்தே
என்னையுன் பக்தி என்று
எவருமே ஏத்தும் சித்தே
மண்ணிலே புகழொடு தோன்றி
மாண்புற வாழ்ந்த எமது முத்தே.
எண்ணினர் எண்ண மெல்லாம்
இதழ்கமழ் மலராய் ஆக்கி
கண்ணிலே ஒற்றிப் போற்றி
நின்கழல்களில் வைத்தோம் ஐயா!
பண்ணிய பூஜை உன்தன்
பாதபூ ஜைக்கே — ஆக

அன்பு மனைவி, மக்கள், மாமி
சகோதரங்கள், பெருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர் சிவசம்பு சரவணமுத்து அவர்களின் வாழ்க்கை வரலாறு

தமிழ் மக்களின் கலை கலாச்சாரப் பண்பாடுகள் அனைத்தும் தேங்கித் ததும்புகின்ற அழகிய பூமிதான் சங்கானைக் கிராமம். இக்கிராமத்தில் அழகும் ஆற்றலும் அறிவும் நிரம்பிய பல பெருமக்கள் பிறந்துள்ளார்கள். இவர்களில் மிகவும் சிறப்பும் பெருமையும் மிக்கவர்தான் திருவாளர் சிவசம்பு அவர்களாகும். இங்கே சிறப்பு என்னவென்றால் இவருடைய மூதாதையர்களும் மூளாயைச் சேர்ந்தவர்களேயாகும். விளையும் பயிரை முளையிலே தெரியுமென்பார்கள். அதற்கிணங்க திரு சிவசம்பு அவர்கள் சிறுவயதிலே மிகவும் சிறப்பாக வளர்ந்து வந்தார். மொழிப்பற்று கலை கலாச்சாரப்பற்று இனப்பற்று என்பன அவர் எடுத்துவைக்கின்ற ஒவ்வொரு அடிகளிலும் பிரதிபலிப்பதாக இருந்தது. எழில் கொஞ்சும் மலையகங்களுக்கெல்லாம் சென்று, சைவத்தையும் தமிழையும் தழைத் தோங்கச் செய்தார். சுவாமி விவேகானந்தரோடு நெருங்கிய தொடர்புடையவராக இருந்தார். அக்காலத்திலேயே சங்கானை கிராமத்தின் வளர்ச்சிக்காக நின்று கிராமத்தின் கண்ணெனப் போற்றப்படுகின்ற சிவப்பிரகாச வித்தியா சாலையை உருவாக்கி தன் மகனின் பெயரால் கிராமத்து மக்களுக்கு ஈந்தார். சிதம்பரப்பிள்ளை நாச்சிப்பிள்ளை தம்பதியின் மகள் மாணிக்கம் என்கின்ற மனிதருள் மாணிக்கத்தை வாழ்க்கை துணைவியாக ஏற்றுக்கொண்டு, வாழ்க்கையில் அன்னபூரணம், சிவப்பிரகாசம், இராமநாதன், சரவணமுத்து, சண்முகராசா ஆகிய அரும் பெரும் புதல்வர்களைப் பெற்றெடுத்தார். இவர்களுள் ஆயிரத்தித்தொளாயிரத்து இருபத்தியேழாம் ஆண்டு தை மாதம் இருபத்தைந்தாம் திகதி (25 - 01 - 1927) இவ்வுலகில் வந்துதித்தவர்தான் இங்கு நாம் நோக்குகின்ற திரு. சரவணமுத்து என்கின்ற எழுத்து முத்தாகும். திரு. சரவணமுத்து அவர்கள் தந்தையாரைப்போலவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தரையில் அவதரித்தார். அன்பு, அறிவு, அழகு, ஆற்றல் அத்தனையும் இவர் வசம் வளமாக மிளிர்ந்தது. சிறுவயதில் இவர் தன் தமயனாரின் பெயரினைத் தாங்கி நிற்கும் சிவப்பிரகாச வித்தியாசாலையில் கல்விபயின்றார். பின்னர் சண்டிலிப்பாய் ஆங்கில வித்தியாசாலையிலும், அதன் பின்னர் சுந்தரத் தமிழ் காக்கும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் கல்விபயின்றார். கல்வியுடன் பல்கலையும் மேன்மையுறக் கற்றதனால் நானிலம் இவர் சேவையை நாடிநின்றது. பல இடங்களிலும் பண்பான தன்சேவையை நல்கிய இவர் ஈற்றில் உள்ளூராட்சி அமைச்சில் இறைவரிப் பரிசோதகராக பணியாற்றினார். சேவையில் வல்லவராக நல்லவராக விளங்குகையில் தன் மூதாதையர் பிறந்து வளர்ந்து குலாவிய முத்தான கிராமமாம் மூளாயில் சீரும் சிறப்பும் பொருந்திய இவரின் மைத்துனியான இளையதம்பி - விசாலாட்சி (மலாயன் பென்சனியர்) தம்பதியர்களின் அன்புக்குரிய புதல்வியான யோகாம்பிகை அவர்களை (22 - 01 - 1905ல்) தன்வாழ்வில் தான் செய்த யோகமெனக் கரம்பிடித்தார். இன்பம் நிறைந்த இவர்களின் வாழ்க்கைச் சோலையில் ஆசைக்கு ஒன்றும் ஆஸ்திக்கு ஒன்றுமாக இரண்டு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்கள். மகள் பவானி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் க. பொ. த உயர்தரம் கலைப்பிரிவில் கல்விபயில்கிறார். மகன் சிவரூபன் கொழும்பு மாநகரத்தின் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் க. பொ. த உயர்தரம் வர்த்தகப்பிரிவில் படித்துக்கொண்டிருப்பவர். இவர்களின் குடும்பம் ஓர் ஆனந்தம் விளையாடும் வீடு. பூரணகும்பமென வாழ்வு பொலிவுபெற்று விளங்கும்வேளையில் திரு. சரவணமுத்து அவர்கள் நீண்ட நாட்களாக தான் ஆற்றிய சேவையிலிருந்தும் ஓய்வுபெற்று பல பொதுப்பணிகளில் ஈடுபடலானார். அதனால் "தங்கு அண்ணை" என எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்டு வரும் நாளில் அன்று ஒரு நாள் (16 - 01 - 1987) அன்போடு எம்மத்தியில் வாழ்ந்து வந்த அன்னார் மண்ணுலகைவிட்டு விண்ணுலகம் புகுந்திட்டார். இவ்வாறு அன்னாரின் வாழ்வு இனிது நிறைவேறிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மனைவி யோகாம்பிகை அவர்களின்
# பிரலாபம்

அன்போடு இணைந்த என்
ஆருயிரே நாயகரே
உம்மோடு இணைந்ததனால் நான்பெற்ற
இன்பங்கள் பலகோடி
பண்போடு இசைபாடித் துன்பமின்றி
பக்கத்தே பகலிரவாய் பார்த்திருந்து
கண்ணோடு மணியாகக் காத்து
என்னை அணைத்து விட்டு
விதியென்று சொல்லித்தான் நீர்
விரைந்தெங்கு போனீரோ?

## அன்புமகள் பவானியின்
# கண்ணீரஞ்சலி

அப்பாவுக்கு ஒப்பாவார் இப்பாரில்
யாருளார் என்று நான்
அல்லும் பகலுமே அவர் நிழலில்
வாழ்ந்து வந்தேன்
அன்போடு அவரென்னைப்
பூவன் நீ என்றழைத்தால்
தாவிவரும் கன்றாவேன் தவிக்கின்றேன்
இப்போது எனைவிட்டுப்
போனதெங்கே நானறியேன் பிதாவேயென்று
கூவியழுகின்றேன் அப்பாவே வாரீரோ!

## அன்பு மகன் சிவரூபனின்
# சோககீதம்

தந்தையே நீங்கள் எந்தன்
பாசத்தின் தடாகமன்றோ
பண்போடு எனைவளர்த்த
அன்பான இதயமன்றோ
வாஞ்சையோடு நான் கேட்பதெல்லாம்
வாரியே வழங்கினீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் விஞ்சுபுகழ் சேர்த்திடவே
விரைந்து நான் படிக்கலுற்றேன்
அஞ்சியெனைப் பதைக்கவிட்டு ஐயாநீர்
அரனடியே சேர்ந்திரோ.

## அன்பு மாமி விசாலாட்சி அவர்களின்
## பிரலாபம்

மகளுக்கு வாழ்வளிக்க வந்தீரே
என்மக்களோடு மக்களாகக் கலந்தீரே
குணத்திற்கோர் குலவிளக்காய் வந்தீரே
கூடிக்குழாம் சூழ வாழ்ந்தீரே
மாமி என்றழைத்தால் மனங்குளிரும்
மறுபடியும் அழைப்பீரோ என்னத்தோன்றும்
விடியற்காலையிலே விழித்திருந்தீர்
மறுபடியும் விடியுமுன்பே மடிந்திட்டீர்
எங்கள் குலதீபம் அணைந்ததென்றே
நாம்துன்ப இருள்தனிலே வாடுகிறோம்!

## அன்புத் தம்பி சண்முகராசா குடும்பத்தாரின்
## பிரலாபம்

என் தம்பியார் குடும்பம் என்று
தாவியோடி வந்திடுவீர்
இத்தாரணியில் உம்மைப்போல்
தங்கமனம் நாமறியோம்
திங்கள்தோறும் உங்கள்
பாதம் பதிந்த வீடு
நீங்களோ பாதியில் போதல்கண்டு
சொட்டும் கண்ணீரையாரறிவார்
சொர்க்கத்தில் வாழ்ந்தால் தேவர் சொல்வார்
சோகத்தில் வாழ்கிறோம் நாங்களின்று.

## அன்புச் சகோதரி அன்னபூரணம் குடும்பத்தாரின்
## தாளாத் துயரஞ்சலி

தங்கு என்னுசைத் தம்பியானுன்
பொங்கு பாசத்தோடு புகுந்துகொண்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் அவன்முகம் தெரியுதென்று
தம்பி என்தம்பியென நானழைத்தேன்
நம்பிநானிருந்த அவன்வடிவம் நலிந்ததுவோ?
வெம்பி வெம்பி மெலிந்ததுவோ
தொங்கு தடிகளிலே மாலைகட்டி
தங்குலை சுமந்து நால்வர் போகின்றார்
இங்கவன் வாழ்ந்தது போதுமென்றோ
என்னையும் அழைத்து முன்னே போகிறான்

## மைத்துனர் திரு. பாலசிங்கம் குடும்பத்தாரின்
## இதய ஒலி

மைத்துனரே இத்தனைக்கும் நீர்துணையே
என்றிருந்தோம்
வைத்திருந்த பாசமெல்லாம் உம்மிடமே
என் குடும்பம்
இத்தரைக்கோர் சித்திரையாய் முத்திரை
நீர் பதித்தீரே
நித்திரையில் நாம் இருந்தாலும்
நினைவோடு வருவீரே
எத்தரை உதைத்துநீர் எம்மிடம்வாராமல்
அத்தரைக்கே போனதென்ன அறைவீர்

## மைத்துனர் சிவகுருநாதன் குடும்பத்தாரின்
## உள்ளக்குமுறல்

உதயத்து சூரியன்போல் இதயத்தில்
தினம் வருவார்
மைத்துனர் தங்கவரை மறக்கவோ
எமதாயுள் முடியவில்லை
காலையும் மாலையும் எமைத்தேடி
ஓடி வந்தார்
வாடாத மலர்போல மனத்துள்ளே
வாழுமவர்
கூடுவிட்டே எங்கு போனார்
நாங்கள் இத்தால் அழுகின்றோமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனி திருமதி ஐயம்பிள்ளை - பாக்கியம் குடும்பம்
## நினைவஞ்சலி

அன்போடு அழைத்தெம்மை அணைத்திடுவீர்
பண்போடு பயணங்கள் அனுப்பிடுவீர்
பிள்ளைகள் மகிழ்ந்திடவே பகிடிசொல்வீர்
பெற்றவரைப் போல எண்ணிப் பேணிவந்தீர்
எங்கள் உறவுகளின் உயர்வுக்கோ ஏணியானீர்
எண்ணியதைத் திண்ணியமாய் சொல்லுகின்றோம்
அந்தகோ மைத்துனரின் இழப்போ என்றால்
இழக்கவே முடியாத இழப்பேயாகும்
ஆனதனால் எங்கள் ஆவிகளோடு
இரண்டறக் கலந்திடவே ஓடிவாரீர்

## மைத்துனர் மலேசியா வாழ் இராசநாயகம் குடும்பம்
## கண்ணீரஞ்சலி

அத்தானை அன்போடு தேடுகின்றோம்
அல்லும் பகலுமே வாடுகின்றோம்
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்திருந்தார்
வழியிலேன் எமைவிட்டுப் பிரிந்துவிட்டார்
நன்மையிலும் தீமையிலும் நாடிவந்து
கூடிநாம் மகிழ்ந்திட ஆசிதந்தார்
தேடியொருகால் நாம் ஓடி வந்தால்
வாட எமைவிட்டே ஓடி விட்டார்
பாபி அவர்புகழ் வாழ்கவென்றே
கண்ணீரால் இம்மண்ணைக் கழுவுகின்றோம்

## அன்புப் பேத்தி அர்ச்சனா அழகராசா
## உண்ணாமல் அடம்பிடிக்கிறாள்

அர்ச்சனா நான் உலகிற்கு அர்ச்சனை ஆனபோது
ஐயையோ தாத்தாதான் அர்ச்சனா என்றழைத்தார்
அத்தனை அன்போடு நானிங்கு வாழுகையில்
ஐயையோ தாத்தாதான் சாமியிடம் போனாராம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாடமைந்த பரம்பரையினர்

திருசி. க. திருச்சிற்றம்பலம் அவர்கள்
(சங்கானை, முன்னாள் பட்டினசபைத் தலைவர்)

'தங்கு' பள்ளித் தோழனாகவும் பின்னர் சங்கானை பட்டின சபையில் கடமைபுரியும் பொழுதும் என்னால் அன்னாரின் கடமை பொறுப்புகள் செயற்திறன் பொதுமக்களுடன் பழகும் முறை பற்றி அறியும் வாய்ப்பினைப் பெற முடிந்தது. பள்ளியில் சம காலத்தில் படிப்பவர்கள் எல்லோரும் கடமை புரியும் இடத்திலும் அதே கிராமத்திலும் ஏககாலத்தில் வேலைப்பொறுப்புகளை செய்வதென்பது எப்போதும் நடப்பதல்ல. ஆனால் தங்கு இதற்கு விதி விலக்காக்கப்பட்டார்.

பள்ளி மாணவராக இருந்த பொழுது சிறந்த நல்மாணாக்கனாக இருந்ததோடு மட்டும் நின்று விடாது அதிபர் ஆசிரியர்களின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார். அமரர் திரு. கே. தில்லையம்பலம் அவர்கள் அதிபராக சண்டிலிப்பாய் ஆங்கில பாடசாலையில் கடமை புரிந்த பொழுது மாணவர்கள் ஒழுக்கம் மிகவும் பேணப்பட்டதொன்றாகும். அந்த வரிசையில் தங்குவும் சக மாணவர்களாகிய நாங்களும் அவற்றினை கைக்கொள்ளவும், பின்பற்றி செயற்படுத்தவும் தயங்கியதில்லை. இதனாற்றான் அன்று அப்பாடசாலையில் கற்ற அனைவரும் ஒழுக்கம் பேணவும், பெரியோர் நன்மதிப்பைப் பெறவும் முடிந்தது.

'தங்கு' சங்கானையிலுள்ள ஓர் பெரும் பரோபகார தர்மசிந்தனையுள்ள ஓர் குடும்பத்தை சேர்ந்தவர். அன்னாரின் தகப்பனார் திரு. சிவசம்பு அவர்களே தற்பொழுது சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை இருக்கும் காணியை மனமுவந்து பாடசாலை நிறுவ உதவினார். அப்படியான நல்ல தீர்க்கதரிசமுள்ள தந்தையின் வழியில் தனயன் 'தங்குவும்' பல சமூக தொண்டுகளிலும் ஈடுபட்டது வியப்பில்லை.

சங்கானைப் பட்டினசபையில் கடமை புரிந்த காலத்தில் பொது மக்களுடன் மிகவும் அன்பாகவும் பரிவுடனும் கடமை புரிந்து தமக்கே உரிமையான முத்திரையொன்றினையும் அவர் பொறிக்கத்தவறியதில்லை. வரி வசூலிப்பில் அன்னார் தனக்கே உரித்தான பாணியில் அதனைச் செய்யத்தவறியதில்லை. பட்டினசபை நிர்வாகம் கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் - ''ஓம் செய்வோம்'' என்பார். ஆனால் தனது வழியில் சென்று, தவறாது வரியை வசூலித்தும் விடுவார். இது அவரின் ஓர் பிறப்புடன் கூடிய சாதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கம், அன்பு, இனியசுபாவம், சகலருடனும் சரளமாக பேசும் இயல்பு, அமைதியான முறையில் கடமைபுரியும் முறை, எல்லோரையும் வசிகரிக்கும் புன்முறுவல் இவையாவும் அமரர் தங்குவின் இயற்கையான பண்புகள். இவற்றினை நாம் மறப்பதற்கில்லை.

சேவையில் இருந்து இளைப்பாறிய பின்னர் தமது நாளாந்த கடமைகளுடன தனது சமூகப் பணியையும் செய்து வந்ததோடு, பிறரின் - அன்பையும் ஆதரவையும் பெற்றுக்கொண்ட தங்கு விரைவில் அமரத்துவம் எய்தினர் என்பதைக் கேள்வியுற்ற பலரும் தாங்கொணுத் துயரத்திற்கு உட்படுத்தப்பட்டனர்.

அவரது பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், சகோதரர் அவரது குடும்பத்தினருக்கும் எதையும் தாங்கும் பேராற்றலை இறைவன் வழங்கப் பிரார்த்திப்போமாக.

சங்கானை

# நீங்காத நினைவஞ்சலி

திருமதி கனகம்மா செல்லத்துரை ஓவசியர் குடும்பத்தினர்

அன்பு, அதில் ஊறிவந்த அமுதமொழி, அடக்கம், சாந்தம், எளிமை, எந்நேரமும் குறைவற்ற புன்னகை இவை அனைத்தும் ஒருங்கே அமைந்த ஒருவரைக் காண்பது மிக அரிது. ஆனால் இவை அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றவர் எங்கள் அன்புக்குரிய சிவசம்பு சரவண முத்து அவர்கள் அவரை "தங்கு" என்று எல்லோரும் செல்லமாக அழைப்பார்கள்.

எங்கள் குடும்பத் தலைவர் செல்லத்துரை அவர்கள் மொனருக லையில் பொது மராமத்து வேலைப் பகுதியில் ஓவசியராகப் பணி புரிந்து வந்தார். 1946ம் ஆண்டில் அவரிடம் சென்ற தங்கு 1951ம் ஆண்டு வரையும் அவரிடம் உதவி ஓவசியராக கடமை, கண்ணியம், கட்டுப் பாட்டுடன் பணி புரிந்தார். அனைவரது அன்பையும் மதிப்பையும் பெற்றுக் கொண்டார். பிறந்த பொன்னாட்டைவிட மலைநாட்டில் புகழ் பூத்து விளங்கினார். பின்னர் சங்கானை பட்டின சபையில் இறை வரிப் பரிசோதகராகப் பணிபுரிந்து நேர்மை தவறா நெறியில் பலரா லும் பராட்டப் பட்டார்.

அன்றைய நாள் தொடக்கம் எங்கள் குடும்பத்தில் ஓர் அங்கத் தவராகி உறவு கொண்டார். இன்பத்திலும், துன்பத்திலும் பங்கு கொண்டார். வீட்டில் நடைபெற்ற சுபாசுப கருமங்களில் தலைமை தாங்கிச் சரிவர நிறைவேற்றப் பெரிதும் உதவியுள்ளார். பாண்டவ ருக்கு உதவி புரியும் பரந்தாமனைப் போலத்தக்க தருணத்தில் வந்து தளர்வடையாது பணிகளைச் செய்யும் பண்பாளர். உடல் நோயையும் பொருட்படுத்தாது 1986ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் எம்முடன் மொன் ருகலைக்கு வந்து பேருதவி புரிந்த பெருந்தகையாளர்.

மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசன் தொண்டு என்னும் மனப்பாங்குடையவர். தன்வேலை எது இருந்தாலும் அதனைக் கவனி யாது பிறருக்கு உதவி புரிவதில் பேரின்பம் காண்பவர். தமிழ், ஆங் கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளைத் தங்குதடையின்றிப் பேசுவார். யார் மனமும் புண்படப் பேசமாட்டார். நாம் சினந்து பேசினாலும் சிரித்த முகத்துடன் கேட்டுக்கொள்வார். வசை மொழிகள் அவர் வாயிலிருந்து வந்ததேயில்லை.

எங்கள் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் கூட அவரைத் 'தங் கையா' என்றே அன்புடன் அழைத்தனர். ஆக, இரு தலைமுறைக்கும் அவர் இனிய 'தங்கையா' தான் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து இன்று அவர் வானுறையும் அமரராகி விட்டார். அவரின் பிரிவு எமக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"துவாரகா" சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மை தவறாத நடுநிலையாளர்

திரு தா. இராசேஸ்வரன் அவர்கள்
(இளைப்பாறிய ஆசிரியர், மூளாய்)

அமரர் திரு. சிவசம்பு சரவணமுத்து அவர்களுடன் அண்மைக் காலத்திலேயே நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவர் எப்பொழுதும் இன்முகம் காட்டி, எவரையும் அன்புடன் வரவேற்று. பண்புடன் பழகும் இயல்பினர். இவரது இல்லத்துக்கு எப்பொழுது சென்றாலும் "வாருங்கோ, வாருங்கோ" என அன்பாக வரவேற்று தமிழர் பண்பாட்டுக்கு அமைய உபசரிக்கும் பண்பாளன். அமரரின் சமயப்பற்று ஆலய வழிபாட்டுடன் நில்லாது சைவ ஆகம விதிமுறைகளிலும் ஆழமான அறிவைப் பெறுமளவுக்கு வியாபித்திருந்ததை அறிந்து மகிழ்ந்து கொள்ளும சந்தர்ப்பங்கள் பல தடவை கிடைத்தன

நண்பர் திரு. சி. சரவணமுத்து உண்மை, நேர்மை, நடுநிலை தவறாத உத்தமனுவார். எப்பிரச்சனையிலும் இவரது நடுநிலை தவறாத ஆலோசனைகள் எல்லோரும் ஏன்றும் வரவேற்கக் கூடிய முடிவை எடுக்க உந்து சக்தியாக இருந்ததை இப்பகுதி மக்கள் என்றும் நன்றியுடன் நினைவில் கொள்வர். அன்னாரை எதிர் பாராத நேரத்தில் இழந்து தவிக்கும் அன்னாரது மாமியார் மனைவி மக்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அமரர் சி.சரவணமுத்துவின் ஆத்மா இறைவனடி சேரப்பிரார்த்திப் போமாக.

மூளாய் சுழிபுரம். 21 - 2 - 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆழிமுத்தே! உமதுபுகழ் அழியப்போமோ?

காரை நகர்.

சைவமணி, சித்தாந்தச் செம்மல், செஞ்சொல்வாரிதி
வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள்

உண்மையே தெய்வம் ; நல்ல
உள்ளமே கோயில் என்பாய்!
வண்மை சேர் வாழ்வே, இன்ப
வாழ்வெனக் காட்டி நின்ருய்!
திண்மை சேர் மனத்தாய்! நின்றன்
சிறப்பெலாம் நினைக்கும் போது
கண்களால் நீர்தான் வாரும்
கல்மனங் கூடச் சோரும்!

சுடுசொல் எவையும் சொல்லாமல்
சுழித்த முகமாய் நில்லாமல்
வடுவோ அற்பங் கேளாமல்
வாழ்ந்தாய் எம் துயர் கேட்பாயே!
நடுவூர் நின்ற கற்பகம் போல்
நல்ல தண்ணீர் ஊற்றுப் போல்
நெடுக எம்மை நேசித்தாய்
நேயச் சரவணு! மறந்தாயோ!

செந்தமிழில் பற்றுவைத்த சிவசம்பு மகனுய்ச்
சீர்பெறவே வாழ்ந்தஎம் சரவணன் எங்கே?
வந்தோரை வரவேற்கும் முத்து எங்கே?
தேவையிலா இவ்வுலக வாழ்வை நீக்கித்
தேவருல காளஉனைத் தேவை என்று
தேவர்களே உமையழைத்துச் சென்ருர் தாமே
ஆவியை நீத்துடலம் அழிவுற்ருலும்
ஆழிமுத்தே! உமது புகழ் அழியப் போமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்கத்தில் வாழ்ந்திடுவர் சரவணமுத்து அவர்கள்

சட்டத்தரணி இ. த. விக்கினராசா. அவர்கள்
(மூளாய்)

''இங்குற்ற படியங்கும் எனவெளியு நல்லறிஞ ரெக்காலமு முதவுவார்
இன்சொற் றவருர் பொய்மையா மிழுக்குளாயார்'' —தாயுமானவர்

அமரர் திரு.சி சரவணமுத்து மேற்காட்டிய உண்மையை அறிந்தே அதற்கேற்ப வாழ்வு நடாத்தியுள்ளார்.

நல்ல மனிதர், உரமான கொள்கைப் பற்றுடையவர். தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் ஆரம்ப கட்டத்திலிருந்து அதன் அடிவேரில் ஒன்ருகத் தம்மை ஆக்கிக் கொண்டுழைத்த உத்தமர். அமரர் திரு சரவணமுத்து அவர்களின் மறைவுக்கு என் அஞ்சலியைச் செலுத்துவதில் ஆறுதல் அடைகின்றேன்.

என்றும் எதிலும் தூய உள்ளம், மலர்ந்து பொலிந்து சிரித்த முகம், அன்பு கலந்த இனிய உரை, சமன் செய்து நோக்கும் சீரிய பாங்கு இவையே அவரது வடிவமாகும். சமய அடிப்படையில் சமத்துவ நோக்குடையவரான இவர் சமூக சேவையில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்.

அன்னுர் இன்றில்லை. எனினும் அவரது பசுமையான நினைவுகள் மக்கள் மனதிலே நீங்காது நிலைத்து நிற்கும்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்'' என்கிருர் வள்ளுவதேவர். வாழ்வாங்கு வாழ்ந்தவரும் தலை சிறந்த சிவ பக்தருமான திரு சரவணமுத்து அவர்கள், தேவர் உலகினில் நல் விருந்தாயினுர்.

அன்னுரின் ஆன்மா சாந்தி பெறுவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கு அண்ணு தங்கமானவர்

சங்கானை ப. நோ. கூ. சங்க மூளாய்க் கிளைக்குழு
உறுப்பினர்கள்

பல் வளமும் பெற்ற மூளாய் வளநகரின் மத்தியில் வாழ் வாங்கு வாழ்ந்த அமரர் சிவசம்பு சரவணமுத்து (தங்கண்ணு) அவர்களை நெஞ்சம் மறப்பதில்லை. பறவை சேரும் பழமரம் போல் உற்ருருக்கு மட்டுமன்றி நண்பர்களுடனும் மற்றும் எல்லோரிடமும் கரை கடந்த அன்பும் நம்பிக்கையும் கொண்ட பெருந்தகையாளர். தன் குடும்பத்தைப் போன்றே நண்பர்களோடும் சாதாரண மக்களோடும் தாராள மனத்துடன் இன் முகம் மலரக் குசலம் விசாரிப்பதிலும் அவர்களுக்கு உதவுவதிலும் தனக்கென தனியிடத்தைப் பெற்றுக் கொண்ட பெரும் பண்பாளர்.

அன்னூர் அரசசேவையிலிருந்து இளைப்பாறிய கால வரலாற்றில் அவர் இக் கிராம மக்களுக்காக ஆற்றிய பணிகள் பலவும் நினைவில் நிறைந்தவை. குறிப்பாக சங்கானை ப. நோ. கூ. சங்க மூளாய் கிளை பண்டக சாலையின் கிளைக் குழு உறுப்பினராக இருந்து எமக்கு நல்கிய அறிவுரைகளும். ஆலோசனைகளும், சேவைத் திட்டங்களும் எமக்கும் கிளைக் குழுவுக்கும் பெரும் சிறப்பைத் தேடித் தந்தன. இந்நிறுவனத்தின் அபிவிருத்தி ஒன்றே இக்கால கட்டத்தில் கிராம மக்களுக்கு அத்தியாவசியமானது என்பதை பலதடவை எமக்கு இதுபற்றி அறிவுரைகள் ஆற்றி அதற்காக செயற்பட்ட எமது தங்கத்துள் தங்கம் தங்கண்ணு அவர்களை இச் சந்தர்ப்பத்தில் நினைத்துப் பார்க்கிறேம். சங்க கிளைக் குழுவை பொறுத்தளவில் அன்னூரது பிரிவால் ஏற்பட்டுள்ள இழப்பும் இடைவெளியும் ஈற்றில் ஈடுசெய்ய இயலாத ஒன்ருகும். ஆயினும் அன்னூர் காட்டிய மார்க்கங்களும், திட்டங்களும், ஆலோசனைகளும், ஆம் இவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஓரளவுக்குதானும் ஈடு செய்யலாமென நம்புகிறேம். இதுவே நாம் அன்னூருக்கு செய்யும் கைமாருகும். பிரிவால் வாடும் அன்னூரின் மனைவி, மக்கள, உற்ருர் உறவினர் எல்லோருக்கும் எமது கிளைக்குழுசார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு இறையெய்திய அண்ணுவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேம். நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லதோர் இதயத்தை இழந்த உள்ளங்கள்
# கள்ளமில்லா அவரன்பை எண்ணுகிறார்கள்

செல்வன் க. சுதாச்சந்திரன்
(அன்னாரின் பிள்ளைகளின் நண்பர்கள் சார்பாக)

முத்துநீர் மூளாயின் முன்னே நின்ற
ஐயா! சரவணமுத்து உதிர்ந்து போனதனால் சொத்திழந்தோம்
பொட்டிழந்து பூவிழந்து புன்னகையிழந்து
கட்டிழந்த தாயவளின் சோகம் கண்டோம்
தினம் காலடியில் தவம் கிடந்த கன்றிரண்டு
கண்ணீரால் வாடியதை நாமறிந்தோம்
முழுமதிக்கு நிகரான முகத்தைக் கொண்டு
அழுவோரைச் சிரிக்க வைக்கும் உருவிழந்தோம்
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அன்பினோடு
பாச வெள்ளத்தைச் சுமந்துவரும் வள்ளத்தை இழந்தோம்
காலையிலே வீதியோரம கண்டுவிட்டால்
தாவியோடி வந்தெம்மை அழைத்திடுவார்
சேதியேதும் சொல்லியே சிரிக்கவைப்பார்
சிந்தனையைத் தூண்டிவிடும் அறிவு சொல்வார்
அன்புதான் அவர்வடிவம் ஆற்றல் பொங்கும்
எங்கும் அவர்வடிவம் எமக்குத் தோன்றும்
தந்தையைப் போலவே பிள்ளைகளே என்பார்
பின்னர் பிள்ளைகளைப் போலவே பின்வருவார்
எண்ணியதைத் திண்ணியமாய்ச் சொல்லிடுவார்
கண்ணியமாய் மற்றையோரை மதித்திடுவார்
வீட்டுக்கு இருவரை மக்களெனப் பெற்றார்
நாட்டுக்கு நல்லதையே செய்திடவென்று
ஏட்டறிவு எழுத்தறிவு எல்லாம் தந்து
எமக்கவரைச் சோதரராய் நண்பராய் தந்திடவே
இனியவரைப் பற்றியோர் சேதியொன்று
இனியவரைப் பற்றியோர் சேதியொன்று
இனியவரை இதயத்தே வைத்திருக்க
இடியோடு கூடிவந்து வீழ்ந்தது போல்
இதயத்தே வீழ்ந்ததனால் விம்முகின்றோம்
அந்தகோ அன்புவந்து தங்குமடம் போல
சின்னையா ஐயா! எனறுவந்து தங்கிடுவோம்
பொங்கு மன்பை எம்மிடம் தந்துவிட்டு
பொழுதாகிப் போனதென்றோ போனீரையா
விதியொரு சதிசெய்து உம்மைமீட்ட
கதியெமக்கு வரும்வரையும் இங்கிருந்தே
உமதாத்மாவின் சாந்திக்கே பிரார்த்திப்போம் சாந்தி
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பஞ்சபுராணப் பாடல்கள்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார்
அவர்க்கு மிகவே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேகநா யகனை மிகுதிரு வீழி
    மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
    உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பத்தர்கள்
    வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
    புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன்
    அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த பித்தற்குப்
    பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

வேத நாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொருபாகா போற்றி மறுசமயங்கள் மாழ்கப்
பேதகஞ்செய்வாய்போற்றி பிஞ்ஞகாபோற்றியாம்செய்
பாதகமனைத்தும் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
    ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
    குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
    வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
    ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியிடம் போனதாத்தா என்னிடம் வரும்வரையும்
பூமியில் தெரிவதெல்லாம் பொய்யென்றே சொல்லிடுவேன்
உண்மையாய் தாத்தாபோன இடம் தெரியுமட்டும்
உண்ணுமல் தூங்காமல் தாத்தாவைப் பார்த்திருப்பேன்

கடல்கடந்து இந்தியாவின் சென்னைமாநகரில் கல்விபயிலும்
**அன்னாரின் பெருமகன் அகிலேஸ்வரன் அவர்களின்**

## கண்ணீரொலி

ஈழத்து கடல்தாண்டிச் சேதியொன்று வந்தது
இதயத்தைப் புண்ணாக்கி புயலாக்கிச் சென்றது
பண்போடு எமைவளர்த்த சின்னையா முகிலாகி
அகிலனைத் தேடியிங்கு வருவாரோ பார்த்திருப்பேன்!

லண்டன் மாநகரில் வாழ்கின்ற
**அன்னாரின் மருமகன் அருள்நேசன் அவர்களின்**

## அவலக்குரல்

நீங்கள் அருள் என்று அழைக்கையில்
இருள் பறக்கும் அருள் சுரக்கும்
அந்த அன்பினால் நாளும் நான்
சின்னையா என்றழைப்பேன்
சின்னையா முகம்பார்க்கச் சீருடன்
நான் நாடு வந்தால்
என்னையா பார்த்திட நான்என்
கண்ணையா? இழந்திட்டேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகர்சுவாமிகள் நற்சிந்தனை

ஒரு பொல்லாப்புமில்லை

எப்பவோ முடிந்த காரியம்

நாமறியோம் முழுதும் உண்மை

அப்பனும் அம்மையும் சிவமே

அரிய சகோதரரும் சிவமே

ஒப்பில் மனைவியும் சிவமே

ஒளதரும் மைந்தரும் சிவமே

செப்பில் அரசரும் சிவமே

தேவாதி தேவரும் சிவமே

இப்புவியெல்லாம் சிவமே

எனையாண்டதும் சிவமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எம்து குடும்பத் தலைவராம் மறைந்தும் மறையாத மாண்புநிறை தெய்வத்தின் மறைவிலன்றும், மறுநாளும் நேரில் வருகை தந்தும் செய்திகள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தும் ஆறுதலளித்த உற்றூர், உறவினர், அயலவர்கள் ஊரவர்கள் வெளியூர் நண்பர்கள் அனைவருக்கும்,

இன்று நடைபெறும் அந்தியேட்டி சபிண்டிகரண கிரியைகளிலும் எமது அழைப்பை ஏற்று வந்து கலந்து கொண்டு சிறப்பித்த உறவினர்கள் அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும்,இம் மலரைச் சிறப்பாக அச்சேற்றிய பாலா அச்சகத்தினருக்கும் எமது உளங்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவிக்கின்றோம்

மூளாய் வீதி,
மூளாய்.
1 - 3 - 1987

இங்ஙனம்
திருமதி யோ. சரவணமுத்துவும்
பிள்ளைகளும்



அச்சுப்பதிப்பு: பாலா அச்சகம், காரைநகர். போன்: 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org